பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**20 08 2026 THURSDAY 7.15 PM**

ஆகாஷவாணி

## <u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** பிரிக்ஸ் உச்சிமாநாட்டின் தலைவர் பதவி வகிக்க உள்ள இந்தியா சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**2.** நாட்டின் வளர்ச்சிக்கு தென் மாநிலங்களின் பங்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

**3.** நுகர்வோர் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளித்து வருவதாக மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

**4.** பங்களாதேஷ் அதிபராக திரு **Mirza Fakhrul Islam** தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**5.** உலகக்கோப்பை ஹாக்கிப் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா - இங்கிலாந்து இடையேயான ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<>>>>>>

பிரிக்ஸ் உச்சிமாநாட்டின் தலைவர் பதவி வகிக்க உள்ள இந்தியா நிலையான வளர்ச்சிக்கும், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கும் முன்னுரிமை அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சுற்றுச்சூழல் தொடர்பான மத்திய அமைச்சர் திரு புபேந்திர யாதவின் கட்டுரையை தமது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ள பிரதமர், கரியமில வாயு வெளியேற்றத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்துள்ளார்.

மரக்கன்றுகளை நட்டு வனப்பகுதியை விரிவாக்க நடவடிக்கை எடுத்து வருவதாக திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

நாட்டின் வளர்ச்சிக்கு தென் மாநிலங்களின் பங்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

சென்னையை அடுத்த மகாபலிபுரத்தில் 31-ஆவது தென் மாநிலங்களின் முதலமைச்சர்கள் மாநாட்டில் உரையாற்றிய திரு அமித் ஷா, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம், விண்வெளி, தொழில் வளர்ச்சி, வேளாண்மை, இலக்கியம்

உள்ளிட்டவற்றில் தென் மாநிலங்கள் சிறப்பாக பங்காற்றி வருவதாகவும் குறிப்பிட்டார்.

தென் மாநிலங்களின் கல்வி வளர்ச்சி, திறன்மிக்க பணியாளர்கள், தொழில்துறை நிபுணர்கள், நாட்டின் வளர்ச்சிப்பாதையை செம்மைப்படுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

புதுமை கண்டுபிடிப்புகள், வருவாய் பெருக்கம் உள்ளிட்டவற்றில் தென்மாநில அரசுகளும், மக்களும் சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தென்மாநிலங்களுக்கு இடையே நிலவும் நதிநீர் பங்கீடு பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் விரைந்து தீர்வுகாண நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு அமித் ஷா வலியுறுத்தினார்.

<<<<<>>>>>>

வந்தே மாதரம் பாடலின் இரண்டு சரணங்களை மட்டும் பாடப்போவதாக காங்கிரஸ் செயற்குழுவில் முடிவு செய்யப்பட்டுள்ளதற்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா குறை கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இது தேச நலனுக்கு எதிரானது என்றும், நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தை மதிக்காத செயல் என்றும் சுட்டிக்காட்டினார்.

இந்த பாடலின் **150**-ஆவது ஆண்டு கொண்டாடப்பட்டுவரும் இத்தருணத்தில், மத்திய அரசு வந்தே மாதரம் பாடலை முழுமையாக பாட வேண்டும என்று கூறியுள்ள நிலையில், காங்கிரஸ் கட்சியின் இத்தகைய முடிவு வரலாற்று பிழை என்று அவர் தெரிவித்தார்.

இதனிடையே, புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு கே சி வேணுகோபால், காங்கிரஸ் கட்சி கடந்த **1937**-ஆம் ஆண்டிலிருந்தே வந்தே மாதரம் பாடலை பாடிவருவதாக தெரிவித்தார்.

பிஜேபி இந்த பிரச்சினையை அரசியலாக்குவதாக கே சி வேணுகோபால் குறை கூறினார்.

<<<<<>>>>>>

நுகர்வோர் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளித்து வருவதாக மத்திய உணவு மற்றும் நுகர்வோர் விவகாரங்கள்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தேசிய சோதனை மைய சீரமைப்பு குறித்து ஆலோசனை மேற்கொண்டபின் சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், தர நிர்ணயத்திற்கான நவீன முறைகளை பயன்படுத்தப் போவதாக தெரிவித்துள்ளார்.

நுகர்வோர் விவகாரத்துறை செயலர் **Nidhi Khare** உள்ளிட்டோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

<<<<<>>>>>>

இந்தியா — ஜப்பான் இடையேயான உறவுகள் ஜனநாயக அடிப்படையில் வலுவடைந்து வருவதாக பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் **Shinjiro Koizumi**-வுடனான பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாட்டில் உரையாற்றிய அவர், இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின்கீழ், ராணுவ தளவாடங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருவதாக கூறினார்.

ஜப்பானில் இயற்கை பேரிடரின்போது அந்நாட்டு மக்களுக்கு இந்தியா உதவியதாக அவர் தெரிவித்தார்.

இந்தியா — ஜப்பான் இடையேயான தூதரக உறவுகளின் 75-ஆம் ஆண்டு விழா அடுத்த ஆண்டு கொண்டாடப்பட உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இம்மாநாட்டின்போது, இந்தியா — ஜப்பான் இடையே கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்த ஒப்பந்தம் இன்று கையெழுத்தானது.

<<<<<>>>>>>

தில்லியில் மாணவர்கள் நடத்திய போராட்டத்தின்போது காவல்துறையினர் மேற்கொண்ட நடவடிக்கையை விசாரிக்க ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி திரு ஆர். சுபாஷ் ரெட்டி தலைமையில், ஐந்து உறுப்பினர்கள் அடங்கிய உயரதிகாரம் கொண்ட விசாரணைக்குழுவை உச்சநீதிமன்றம் அமைத்துள்ளது.

ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி திரு ரவிசங்கர் ஷா, ஓய்வுபெற்ற நீதிபதி திரு சைலேந்திர கவுர், முன்னாள் சிபிஐ இயக்குநர் திரு ரிஷிகுமார் சுக்லா, ஓய்வுபெற்ற டிஜிபி திரு எல் ஆர் பிஷ்னாய் ஆகியோர் விசாரணைக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இந்த வழக்கு குறித்து தொடர்ச்சியாகவும், குறிப்பிட்ட கால அடிப்படையிலும் விசாரணை மேற்கொண்டு இடைக்கால அறிக்கைகளையும் சமர்ப்பிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

<<<<<>>>>>>

இந்தியா — சிங்கப்பூர் இடையே செமி கண்டெக்டர், சைபர் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரில் இருநாடுகளுக்கு இடையேயான நான்காவது கூட்டத்திற்கு பின்னர் சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், மருத்துவம், நிதி தொழில்நுட்பம், டிஜிட்டல் தொழில்நுட்பம், உற்பத்தித்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒருங்கிணைந்து செயல்பட முடிவெடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தியா — சிங்கப்பூர் இடையே டிஜிட்டல் திறன் மேம்பாட்டில் ஒத்துழைப்பு குறித்து ஆலோசனை மேற்கொண்டதாக திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

சட்டீஸ்கர் மாநிலத்தில் **20** ஆண்டுகளுக்கு மேலாக நக்சலைட்டுகளின் பிடியில் சிக்கித்தவித்த மலைகிராம மக்கள் தற்போது மத்திய அரசின் திட்டங்களால் பயன்பெற்று வருகின்றனர்.

மத்திய - மாநில அரசுகள் மற்றும் பாதுகாப்புப் படையினரின் கூட்டு முயற்சிகளால் நக்சல் இல்லாத மாநிலமாக சட்டீஸ்கர் உருவெடுத்துள்ளது.

மலை கிராமங்களில் அடிப்படை வசதிகள் செய்துதரப்பட்டு பழங்குடியின மக்களின் வாழ்வாதாரம் மேம்பட்டு வருவதாக எமது செய்தியாளர் விஜயகுமார் தெரிவிக்கிறார்.

*(Voice Byte — விஜய்குமார் - 54 Sec. )*

<<<<<>>>>>>

சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் அன்னையின் பெயரில் மரக்கன்று நடும் இயக்கம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை இணையமைச்சர் திரு **Harsh Malhotra** தெரிவித்துள்ளார்.

தில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த இயக்கத்தின்கீழ், தில்லியில் **70** லட்சம் மரக்கன்றுகள் நட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பசுமையான தில்லியை உருவாக்க இதுவரை **50** லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளதாகவும் திரு **Harsh Malhotra** கூறினார்.

<<<<<>>>>>>

பங்களாதேஷ் அதிபராக திரு **Mirza Fakhrul Islam** தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இன்று நடைபெற்ற தேர்தலில் ஆளும் பங்களாதேஷ் தேசிய கட்சி சார்பில் போட்டியிட்ட அவர், **255** வாக்குகள் பெற்று வெற்றிபெற்றதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மொத்தம் உள்ள **349** நாடாளுமன்ற உறுப்பினர்களில் **343** பேர் இன்று வாக்களித்தனர்.

ஜமாய்தே இஸ்லாமி உள்ளிட்ட எதிர்க்கட்சி கூட்டணி சார்பில் போட்டியிட்ட **Oli Aahmad 88** வாக்குகள் பெற்றுள்ளார்.

பங்களாதேஷ் அதிபராக பதவி வகித்த முகமத் ஜஹாபுதின் தமது பதவியை ராஜினாமா செய்ததையடுத்து அங்கு தேர்தல் நடைபெற்றது.

<<<<<>>>>>>>

இலங்கை தலைநகர் கொழும்பில் யூத வழிபாட்டுத் தலத்திற்கு அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு இஸ்ரேல் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, புதுதில்லியில் உள்ள இஸ்ரேல் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், யூத சமூகத்தினரின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் உள்ள யூத வழிபாட்டுத்தலத்தை மூட வேண்டும் என்று வலியுறுத்தி புத்த பிட்சுகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன.

இலங்கையில், இஸ்ரேலுக்கான தனி தூதரகம் அமைக்கப்படாமல் உள்ள நிலையில், புதுதில்லியில் உள்ள இஸ்ரேலிய தூதரகம் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

<<<<<>>>>>>

வேளாங்கண்ணி புனித ஆரோக்கியமாதா ஆண்டு பெருவிழா வரும் **29**-ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் **8**-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

இதனையொட்டி, தாம்பரத்திலிருந்து — வேளாங்கண்ணிக்கு சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

<<<<<>>>>>>

உலகக்கோப்பை ஹாக்கிப் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா - இங்கிலாந்து இடையேயான ஆட்டம் நெதர்லாந்தின் **Amstelveen**-ல் தற்போது நடைபெற்று வருகிறது.

**D** பிரிவில் சீனா **7** புள்ளிகளுடன் முதலிடத்திலும், இந்தியா **4** புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், இங்கிலாந்து **3** புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

**<<<<<END>>>>>>**